## எடப்பாடி ஆட்சியில் நடைபெற்ற சோதனைகள் என்ன ஆனது ?

# ஒன்றிய அரசின் திட்டங்களின் ஊழல்களை மூடி மறைத்தது யார்?

## அமித்ஷாவுக்கு – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி!

சென்னை, ஏப்.11–

“ஒன்றிய அரசின் திட்டங்களில் நடைபெற்ற ஊழல்களை மூடி மறைத்தது யார்?” என்று ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து ஒன்றிய பாஜக அமைச்சர் அமித்ஷா எக்ஸ் பதிவுக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது ‘எக்ஸ்’ பதிவில் கூறியிருப்பதாவது:

“திமுகவின் ஊழலால் தமிழக மக்கள் சலிப்படைந்துள்ளனர். அதனால் தான் திமுக, தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தை எழுப்பி தங்கள் ஆட்சியில் நடந்த ஊழல்களை மூடி மறைக்கப் பார்க்கிறது” எனப் பொய்யைச் சொல்லியிருக்கிறார் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா.

“ஊழலை ஒழிக்கிறேன்” என ஆட்சியில் அமர்ந்த பிரதமர் மோடி என்ன செய்தார்? எதிர்க்கட்சிகளை ஒடுக்குவதற்கே ’ஊழல் புகார்’ என்ற கேடயத்தைப் பயன்படுத்தினார்.

மோடி பேசிய ’அச்சா தின்’ (நல்ல நாள்) எல்லாம் அம்பானி, அதானி போன்ற கார்ப்பரேட்டுகளுக்குத்தான், அவர்களின் வளர்ச்சிக்குத்தான் ‘வளர்ச்சி’ நாயகன்’ உழைத்தார். அவையெல்லாம் முறைப்படுத்தப்பட்ட ஊழல்கள்தான்!

ஒன்றிய அரசின் திட்டங்களில் நடைபெற்ற ஊழல்களை அம்பலப்படுத்தியது ஒன்றிய தலைமை கணக்குத் தணிக்கை அமைப்பின் (CAG) அறிக்கை. 2023ல் வெளியிட்ட சி.ஏ.ஜி அறிக்கையில் 7 லட்சத்து ஐம்



பதாயிரம் கோடி ரூபாய் மோசடி அம்பலத்துக்கு வந்தது. பாரத் மாலா திட்டம், துவாரகா விரைவுப் பாதை, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சுங்கச்சாவடிக் கட்டண வசூல், ஆயுஷ்மான் பாரத் திட்டம், அயோத்தி மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம், ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிமிடெட் (எச்.ஏ.எல்.) விமான எஞ்ஜின் வடிவைமைப்பு, ரயில்வே நிதி ஆகியவற்றில் நடந்த முறைகேடுகளால் மத்திய அரசுக்கு 7.5 லட்சம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

**ஊழல் புகார் குழி தோண்டி புதைக்கப்படும்!**

ஊழல்வாதிகளைக் காப்பாற்ற 2018 ஊழல் தடுப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தது மோடி அரசு. பொது ஊழியர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும் என்றால் அந்த துறையின் தலைமை அதிகாரியிடம் சி.பி.ஐயும் லஞ்ச ஒழிப்புத் துறையும் அனுமதி பெற வேண்டும் எனச் சட்டத்தையே மாற்றினார் மோடி. இதனால், ஊழல்வாதிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது. அந்தத் துறையின் உயர் அதிகாரியே ஊழலில் சம்பந்தப்பட்டிருந்தால் அனுமதி தாமதிக்கப்படுகிறது.

உயர் அதிகாரி அனுமதி மறுத்துவிட்டால் புகார் அத்துடன் குழிதோண்டிப் புதைக்கப்படும்.

அமித்ஷா தமிழ்நாடு வரும் போதெல்லாம் அப்போது யார் ஆட்சி செய்து கொண்டிருந்தாலும் ஊழல் அரசு எனப் பேசுவதை வாடிக்கையாக வைத்திருக்கிறார்.

அப்படிதான் 2018 ஜூலை 9 சென்னையில் நடந்த கூட்டத்தில் பேசிய அமித்ஷா ‘நாட்டிலேயே ஊழல் அதிகமாக உள்ள மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது” என்றார். அப்போது எடப்பாடி ஆட்சி தமிழகத்தில் நடந்து கொண்டிருந்தது. அடுத்த ஆண்டே அந்த எடப்பாடி பழனிசாமியோடு தான் 2019 நாடாளுமன்றத் தேர்தலை அமித்ஷா சந்தித்தார். அதன் பிறகு 2021 சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவுடன் பாஜக கூட்டணி வைத்தது.

**எடப்பாடியை பணிய வைக்க நடத்தப்பட்ட சோதனைகள்!**

எடப்பாடி பழனிசாமியின் உறவினர்கள் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வீடுகளிலும் அலுவலகங்கள் மீது நடத்தப்பட்ட வருமானவரித் துறை அமலாக்கத் துறை சோதனைகள் எல்லாம் என்ன ஆனது? என்பதை அமித்ஷா தமிழ்நாடு வரும் இந்த நேரத்தில் சொல்லுவாரா? எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த ஊழல்கள், ரெய்டுகள், சிபிஐ விசாரணைகள், அமலாக்கத் துறை சோதனைகள் எல்லாமே நாடகம்தான். எடப்பாடி பழனிசாமி ஆட்சியைப் பணிய வைக்கத்தான் அவை பயன்படுத்தப்பட்டன. ஊழலை ஒழிக்கவில்லை. அந்த ஊழல் புகார்களை வைத்து கூட்டணி பேரம் இன்று வரை நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பாஜகவின் கூட்டணிக்கு ஊன்றுகோலாக ஊழல்கள்தான் இருக்கின்றன.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி தமது ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

### பள்ளிக்கல்வித்துறை மீது முதல்வர் அதிகக் கவனம் செலுத்துகிறார்!

# பள்ளிக் கட்டிட கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிடுங்கள்!

## பெற்றோர் – ஆசிரியர் கழக மாநில பொதுக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வலியுறுத்தல்!

சென்னை, ஏப். 11-

“உங்கள் பகுதிகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்குவீர்” என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:

“உழுபவர்களுக்கே நிலம் சொந்தம்” என்று உரிமைக் குரலோடு தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை ஆரம்பித்தவர் முத்தமிழர் கலைஞர் அவர்கள். இன்று இந்தியாவில் ”ஆளுநர்களுக்கு அதிகாரம் இல்லை ஆளுபவர்களுக்கே அதிகாரம்” என்ற உரிமையினை பெற்றுத்தந்த தீர்ப்பாக இந்த தீர்ப்பு அமைந்திருக்கிறது. இந்த தீர்ப்பினால் நமக்கு என்ன பயன்? இந்த தீர்ப்பினால் பள்ளிக் கல்வித் துறைக்கு என்ன பயன்? என்று சிந்தித்து பார்க்க வேண்டும். அனைத்து முதலமைச்சர்களும் கொடியேற்றுகின்ற உரிமையை பெற்றுத் தந்தது முத்தமிழர் கலைஞர் என்பதை ஒட்டுமொத்த இந்தியாவே சொல்லும். அதே போன்று அனைத்து மாநிலத்தை சார்ந்திருக்கின்ற முதலமைச்சர்களுக்கும் அவர்களுக்கான உரிமையை பெற்று தந்தவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று வரலாறு சொல்லும்.

தேவையான நேரத்தில் தேவையான தீர்ப்பாக வந்திருக்கின்றது. நமது பிள்ளைகளுக்கு என்ன பாடத் திட்டம் பயன்தரும் என்ற உரிமையினை நாம் பெற்றுள்ளோம். சட்டமன்ற உறுப்பினரான பூண்டி கலைவாணன் சொன்னது போல, நாங்கள் எந்த மனிதர்களுக்கோ எந்த மொழிகளுக்கோ எதிரானவர்கள் அல்ல. எல்லாரும் புரிந்து கொள்ள வேண்டும், எங்கே திணிப்பு என்று வருகிறதோ, அப்பொழுது முதல் ஆளாக குரல் கொடுப்பவர்கள் தமிழினத்தை சார்ந்திருக்கின்ற நாம் தான்.

அதனால்தான் தற்



போது ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் ஒவ்வொருவரும் அவர்களுடைய மாநிலம் சார்ந்த உரிமைகளை பேச தொடங்கிருக்கிறார்கள். இது வெறும் அரசியல் சார்ந்த கருத்திற்காக மட்டும் பார்க்கக்கூடாது. தமிழ்நாட்டில் பிறந்திருக்கின்ற நாம் இருமொழி கொள்கையை உயர்த்தி பிடிப்பதற்கு காரணம் உலக வரலாற்றில் நம்முடைய தாய் மொழிக்காக தன்னுடைய இன்னுயிர் நீத்த தியாகிகள் உள்ள மாநிலம் தமிழ்நாடு தான் என்கின்ற பெருமையை நாம் பெற்றிருக்கின்றோம்.

**தமிழ்நாட்டிற்கு பெருமையை நிலைநாட்டியவர்கள்!**

முன்னாள் குடியரசுத் தலைவர், விஞ்ஞானி அப்துல் கலாம் ஐயா முதல் தற்போது ஐ.எஸ்.ஆர்.ஓ இயக்குநர் நாராயணன் வரை உள்ள அறிஞர்கள் அனைவரும் இருமொழிக் கொள்கையில் படித்து நம்முடைய தமிழ்நாட்டிற்கான பெருமையை நிலைநாட்டியுள்ளனர். எனவே இருமொழிக்கொள்கையே போதுமானது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது வருகை தந்திருக்கின்ற நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூபாய் 7800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு 18000 வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகிறது. உங்களுடைய பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுமான பணி நடைபெறும் பகுதிகளுக்கு சென்று அந்த கட்டிடங்கள் எப்படி வேலை நடைபெறுகிறது? சரியாக தான் இருக்கிறதா? சரியாக தான் அந்த வேலையை செய்கிறார்களா? என்று நீங்கள் நேரில் சென்று பார்க்க வேண்டியது உங்கள் கடமை.

பள்ளிக் கல்வித்துறையில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு சீருடை வழங்குதல், பள்ளி வகுப்பறை கட்டடம் கட்டுதல், உணவு வழங்குதல் போன்ற பணிகள் சமூக நலத்துறை அமைச்சர், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் போன்ற பல்வேறு அமைச்சர்களுடைய பொறுப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, அதற்கான ரிசல்ட்டை நாம் கொடுக்க வேண்டும். இங்கு வருகை தந்திருக்கின்ற உறுப்பினர்களாகிய நீங்கள் உங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளில் நடைபெறும் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதனை உடனடியாக எனக்கும் பெற்றோர் ஆசிரியர் கழக துணைத்தலைவர் திரு.வி. முத்துக்குமார் அவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

பெருந்தலைவர் காமராஜர் காலத்திற்கு பின் அதிகப்படியான வகுப்பறைகளை கட்டியது திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் முதலமைச்சர் காலத்தில் தான். தமிழ்நாட்டில் மொத்தம் 1.25 கோடி மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். அதில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 70 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். அதற்காக, ஏறத்தாழ 46,767 கோடி ரூபாய் பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இந்தியாவில் 75 கோடிக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படிக்கிறார்கள் அதற்கென 78,000 கோடி ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது. முதலமைச்சர் எந்த அளவிற்கு கவனம் செலுத்துகிறார் என்பதற்காக இந்த ஒப்பீட்டை நான் சொல்லுகின்றேன்.

நமது பிள்ளைகளை உயர்ந்த இடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற ஆசையின் காரணமாக, வருகை தந்திருக்கின்ற நாம் பொதுக்குழுவில் கூடும் போது உங்கள் கருத்துக்களை எழுதிக் கொடுத்து எல்லோரும் பேசி தீர்வு காணும் விதத்தில் ஆக்கப்பூர்வமான கூட்டமாக நல்ல சமுதாயத்தை உருவாக்கக்கூடிய ஒரு இடமாக அதற்கான கருத்துக்களை பரிமாறி கொள்கின்ற இடமாக இது அமைந்திட வேண்டும்.

ஒன்றிய அரசின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டால் தான் 2152 கோடி ரூபாய் தருவேன் என்பதனை ஏற்று கையெழுத்து போட்டால் தமிழ் சமுதாயத்தை 2000 வருடங்களுக்குப் பின்னோக்கி இழுத்துக்கொண்டு செல்லுகின்ற பாவத்திற்கு நான் ஆளாவேன். ரூபாய் 10000 கோடி கொடுத்தால் கூட எங்களுக்கு அந்த பணம் தேவையில்லை. கொள்கையை விற்று எங்களது நிதியை பெற வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி 2152 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என முதலமைச்சர் அறிவித்தார்கள்.

இந்தியாவில் பள்ளிக்கு செல்லுகின்ற அனைத்து பிள்ளைகளும் நம்முடைய பிள்ளைகள் தான் என்கின்ற அக்கறையின் அடிப்படையில் சொல்கிறேன் தாய்மொழியை சிந்திக்கவும், ஆங்கிலத்தை தொடர்புக்காகவும் கற்றுக் கொளுங்கள் அதுவே போதுமானது. முதலமைச்சர் அதிக கவனத்தை பள்ளிக் கல்வித் துறையின் மீது செலுத்துகிறார். துறையினை மேம்படுத்துவதற்காக இன்னும் அதிகப்படியான திட்டங்களை கொண்டு வர களத்தில் இருக்கின்ற நீங்கள் உங்களுடைய பங்களிப்பினை தொடர்ந்து வழங்கிட வேண்டும் என்று சொல்லி வருகை தந்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும் இந்த பொதுக்குழுவின் மிகச் சிறப்பான ஏற்பாடு செய்திருக்கின்ற அனைத்து நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றிகள், வாழ்த்துக்கள்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

இப்பொதுக்குழு கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், சி.வி.எம்.பி. எழிலரசன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் துணைத் தலைவர் வி.முத்துக்குமார், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் மு.பழனிச்சாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

---

### மார்க்சிய மேதையும் பெரும் சிந்தனையாளருமான

# காரல் மார்க்சிற்கு சென்னையில் சிலை - முதல்வருக்கு நன்றி!

## மாமேதை காரல் மார்க்ஸ் சிலைக் குழு ஒருங்கிணைப்பாளர் அ. மார்க்ஸ் அறிக்கை!

சென்னை, ஏப்.11–

மார்க்சிய மேதையும் பெரும் சிந்தனையாளருமான காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் சிலை வைக்கப்படும் என்று அறிவித்த முதல்வர் அவர்களுக்கு மாமேதை காரல் மார்க்ஸ் சிலைக் குழு ஒருங்கிணைப்பாளர் அ. மார்க்ஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேராசிரியர் அ.மார்க்ஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

உலகெங்கிலும் மார்க்சிய மேதை காரல் மார்க்சிற்குச் சிலை என்பது கொண்டாடப்பட்டிருந்த போதி லும் நம் தமிழகத்தில் இதுவரை அவருக்குச் சிலை இல்லாதிருந்த நிலை இன்று போக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இந்த வேண்டுகோளை ஏற்று தமிழக அரசு இன்று காரல் மார்க்ஸ் சிலை அமைப்பை முன்வைத்து உள்ளமையை நாம் மனமார வாழ்த்துகிறோம்.

மானுடத்தின் மகத்தான மனிதர்களுக்குச் சிலை வைத்துக் கொண்டாடுவது என்பதைத் தமிழகம் என்றென்றும் பெருமிதத்துடன் கொண்டாடி வந்துள்ளது. மகாத்மா காந்தி தொடங்கி தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, மகாகவி பாரதி, சிங்காரவேலர், அம்பேத்கர் வரை இவ்வாறு கொண்டாடிய பெருமை நமக்குண்டு. நம்மை அடிமைப் படுத்தப்பட்டவர்களுக்கும் கூட இங்கே சிலை வைக்கப்பட்டதும் கூட இங்கு உண்டு. இதுவரை இன்று உலகளவில் பெரிய அளவில் கொண்டாடப்பட்டிருந்த போதும் பேரறிஞர் காரல் மார்க்சுக்கு இதுவரை இங்கு சிலை இல்லாத நிலை இன்று நீக்கப்பட்டுள்ளது.

இதனை சாத்தியமாக்கிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எம் நன்றிகள் என்றென்றும் உரித்தாகின்றன.

உலகின் எல்லாப் பெருமைகளுக்கும் பின்னணியாக உள்ளது நம் தொழிலாளர்களின் உழைப்புத்தான் என்பதை முன்னிறுத்தி உழைப்பின் பெருமையையும் தொழிலாளர்களின் மேன்மைகளையும் கவனம் ஈர்த்து, “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவோம்” என முழங்கிய மார்க்சிய மேதையும் பெரும் சிந்தனையாளருமான காரல் மார்க்சிற்குச் சிலை எடுக்கும் பெருமைக்குரிய திட்டத்தை தமிழ்நாடு அரசு இன்று பொறுப்பேற்றுள்ளதை நாம் மனமாரக் கொண்டாடுவோம். தமிழகத்திற்கு என்று நீண்ட போராட்ட வரலாறுகள் தியாகங்கள் முதலியன உண்டு.

இப்படித் தொழிலாளர்களின் போராட்டங்களின் ஊடாக இன்று



உருப்பெற்றதுதான் இந்தியாவின் சிறப்பு என்பதும் தமிழகத்தின் தனிச் சிறப்புகள் என்பனவும். நம் தந்தை பெரியார் முதன் முதலில் இரு உலகப் பயணம் சென்றார் என்றால் அது காரல் மார்க்சின் நாட்டிற்குத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டு தி.மு.க, ஆட்சிக்கு வந்தது தொடங்கி இன்றுவரை கடந்த மூன்றாண்டு காலமாக மாமேதை காரல் மார்க்ஸ் சிலைக்குழு சார்பில் எங்களின் பரப்புரைகளை மேற்கொண்டு வந்தோம். அரசின் ஒப்புதலோடு இது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் எம் தோழர்கள் தொடர்ந்து உறுதியாக இருந்ததையும் இந்தக் கணத்தில் நினைவு கூர்கிறோம். மாநகர் சென்னையில் காரல் மார்க்சிற்கு சிலை அமைத்திடக் கோரி தொடங்கிய இந்த பரப்புரையின் மூலமாக பல்வேறு தலைவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்தோம்.

குறிப்பாக, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ஜெயசீலன் மற்றும் அன்றைய முதன்மைச் செயலாளர் உதயச் சந்திரன் மற்றும் தலைமைச் செயலாளர் இறையன்பு முதலானோரையும் காரல் மார்க்ஸ் சிலை வைப்பு தொடர்பாக வேண்டி அணுகினோம். அவர்கள் அனைவரும் இந்த முயற்சியைப் பாராட்டி உரிய உதவிகளைச் செய்தனர். முதல்வரின் கவனத்திற்கு இது குறித்து அவர்கள் உரிய முறையில் கொண்டு சென்றதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம்.

உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் நிறுவனர் மதிப்பிற்குரிய தோழர் குசேலர் அவர்கள் மற்றும் கவிஞர் செவ்வியன் முதலானோர் இது குறித்து உரிய நிதி அளிக்க முன் வந்ததையும் மிக்க நெகிழ்ச்சியுடன் நினைவு கூருகிறோம்.

மேலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் நல்லகண்ணு மற்றும் மாநிலச் செயலாளர் தோழர் முத்தரசன், தி.மு.க.வின் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் தோழர் கனிமொழி கருணாநிதி மற்றும் தி.மு.க.வின் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் சண்முகம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் தோழர் பாலகிருஷ்ணன், இந்நாள் செயலாளர் தோழர் பெ.சண்முகம் மற்றும் கந்தர்வக்கோட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம்.சின்னதுரை மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனர் தோழர் தொல்.திருமாவளவன், மற்றும் திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீர பாண்டியன் மற்றும் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் எழிலன் மற்றும் திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் கொளத்தூர் மணி மற்றும் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை ராசேந்திரன் மற்றும் பேராசிரியர் தோழர் சரசுவதி மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் தோழர் கோவை ராமகிருஷ்ணன், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு மற்றும் தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் மற்றும்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ) விடுதலை கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி மற்றும் இடது தொழிற்சங்க மையத்தின் ஆலோசகர் தோழர் எஸ்.குமாரசாமி, மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ) ரெட் ஸ்டார் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் மனோகரன், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பாலன் மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர் சங்கத்தின் ஒருங்கிணப்பாளர் தோழர் ஆர். கீதா மற்றும் யு.சி.பி.ஐ. கட்சியின் தலைவர் தோழர் பாஸ்கர் மற்றும்

மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர், தோழர் திருமுருகன்காந்தி மற்றும் மாற்று ஊடக மையத்தின் பொறுப்பாளர் தோழர் காளீஸ்வரன் கலைக் குழுவினர், திரைத்துறையினர், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்ட ஏராளமான உழைக்கும் மக்கள் சமூக ஆர்வலர்கள், ஜனநாயக சக்திகள் இக்கோரிக்கைக்கு முழு ஆதரவளித்தனர் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

சுருக்கம் கருதி இன்னும் பல ஏராளமான தோழர்கள் பெயர்கள் இங்கே பதியப் படவில்லை. கோரிக்கைக்கு ஆதரவு அளித்த அனைவர்க்கும் எம் நன்றிகள். தமிழக அரசிற்கும் முதல்வர் அவர்களுக்கும் மீண்டும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.